**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**CC .No. 19/2026**

Deposition of Witness : LW4 /PW4

| | | | |
|---|---|---|---|
| Name | மகேஷ் | Taluk | |
| Father's Name | கணேசன் | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 01.07.2026.** | | | |

**எதிரி ஆஜர்.**
**முதல் விசாரணை**

1) நான் வெங்கமேடு, ஓம் சக்தி நகரில் குடியிருந்து எம்பிராய்டிங் வேலை செய்து வருகிறேன். 14.01.2026 ந்தேதி காலை 10.00 மணி அளவில் நானும், கோகிலா என்பவரும் பெரியகுளத்துபாளைம், பிள்ளையார் கோவில் தெருவின் அருகில் நின்று கொண்டிருந்தபோது வெங்கமேடு போலிசார் அங்கு வந்து முதல்நாள் நடந்த அடிதடி வழக்கு சம்பந்தமாக வரைபடம் வரைந்து மகஜர் தயார் செய்து சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நானும், கோகிலா என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர், 10.30 மணி அளவில் பங்கஜவல்லி வீட்டின் அருகே அரிவாள் ஒன்றை போலிசார் கைப்பற்றினார்கள். அதற்காக தயார் செய்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், கோகிலாவும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் கைப்பற்றிய அரிவாளை என்னால் அடையாளம் காட்டமுடியும். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அரிவாள்தான் கைப்பற்றப்பட்ட அரிவாள் ஆகும். **மேற்படி அரிவாள் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

Sd/-T.Wajitha Thabassm
**நீதித்துறை நடுவர்,**
**கூடுதல் மகிளா நீதிமன்றம், கரூர்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 எனக்கு முன்கூட்டியே தெரியும் என்றால் சரிதான். போலிசார் கேட்டுகொண்டதற்கிணங்க நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். ஆவணங்களை போலிசார் முன்கூட்டியே தயார் செய்து வைத்திருந்து கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை, என் முன்புதான் தயார் செய்தார்கள். அ.சா.பொ.1 ஐ எந்த இடத்தில் இருந்து கைப்பற்றினார்கள் என்றால் வீட்டு வாசலின் முன்பு கைப்பற்றினார்கள்.

2) நான் கையொப்பம் செய்த பேப்பரில் அ.சா.பொ1 ஐ எங்கிருந்து கைப்பற்றினார்கள் என்ற விவரம் இருந்ததா என்றால் எனக்கு தெரியவில்லை. சம்பவத்தின்போதே கைப்பற்றினார்களா என்றால் இல்லை, அடுத்தநாள் கைப்பற்றினார்கள். சம்பவம் நடந்தது பற்றி போலிசார் சொல்லிதான் தெரியும் என்றால் அ.சா.1 சொல்லிதான் சம்பவம் பற்றி எனக்கு தெரியும். சம்பவத்திற்கு முன்பு எதிரியை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் நடந்தது பற்றி அ.சா.1 எப்போது என்னிடம் சொன்னார்கள் என்றால் காலை 9.00 மணிக்கு சொன்னார். காலையில் அ.சா.1 கூப்பிட்டதின்பேரில் நான் அ.சா.1ன் வீட்டிற்கு சென்றேன். அ.சா.1, என்னிடம் இந்த வழக்கின் சாட்சியாக இருக்கும்படி கேட்டாரா என்றால் இல்லை.

3) நான், அ.சா.1 ற்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் முன்பு எந்த ஒரு பொருளும் கைப்பற்றபடவில்லை என்றும், போலிசார் கேட்டுகொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/-T.Wajitha Thabassm

**நீதித்துறை நடுவர்,**

**கூடுதல் மகிளா நீதிமன்றம், கரூர்.**